30th September 1958] [Sri M. Kalyanasundaram]

High Court for taking over the mill on lease. But what I noted from our Government is that they have requested the Central Government to take over the mill. I want to know definitely what is happening in the matter.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government are examining the very suggestion which has been made by the Central Government.

MR. SPEAKER : Then there is no point in the hon. Member pressing his adjournment motion. I do not give my permission to the hon. Member to move the motion.

III.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

BILL PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that the Madras General Sales Tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 34 of 1958) has been passed by the Legislative Council on the 29th September 1958 without any recommendation.

IV.—CALLING ATTENTION TO THE FAMINE CONDITIONS IN NORTH ARCOT DISTRICT.

MR. SPEAKER : The hon. Member Sri S. M. Annamalai has given notice of a motion under rule 40 of the Assembly rules for calling attention to a matter of urgent public importance, namely, the famine condition in North Arcot district due to failure of monsoon. The hon. Member may move his motion.

SRI S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே 1957-ம் ஆண்டில், சர்க்கார் புள்ளி விவரங்களின் படி 38·6 அங்குலம் பெய்ய வேண்டிய மழைக்குப் பதிலாக 31 அங்குலம் தான் பெய்தது. 1958-ல் மழையே இல்லாத காரணத்தால், ஏறத் தாழ இரண்டு ஆண்டு காலமாக கடந்தாற்போல மழை பெய்யாததால், அங்கே இருக்கிற கிணறுகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாத காரணத்தால் மக்களும், கால்நடைகளும் மிகவும் கஷ்டப்படுகின்றன. ஒரு சுமை வைக்கோல் 5 அல்லது 6 ரூபாய் விற்பதினால், அவ்வளவு விலை கொடுத்து மாடுகளுக்குத் தீவனம் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, பாதிக்கு மேற்பட்ட மாடுகளை விற்றுவிட்டார்கள். இவ்வாறு வட ஆற்காடு மாவட்டத்திலே பஞ்சம் ஏற்பட்டிருப்பதால், அங்கே வேலை வாய்ப்புகள் இல்லாத காரணத்தினால், அங்குள்ள மக்கள் அண்மையிலுள்ள மைசூர் ராஜ்யத்திற்கு, ஷிமோகா, பத்திராவதி போன்ற இடங்களுக்கு வெளியேறிச் செல்லுகின்றனர்.

(Deputy Speaker in the Chair.)

தொடர்ச்சியாக, சரியான மழை இல்லாததால், இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், கடன் நிவாரணச் சட்டம் 30—6—58-ம் தேதியோடு முடிவடைந்துவிட்டதால், கோர்ட்டுகளில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய கடன்களை இந்த ஆண்டு வசூல் செய்யாமலிருப்பதுடன், அங்கேயுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொடுத்தால்,